**பிப்ரவரி - 15**

**"அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்." - 1யோவா 2 : 5**

இதன் பரீட்சைக்குக் கீழ்ப்படிதல் எந்த அளவிற்கு நாம் கர்த்தரின் வார்த்தையைக் கைக்கொள்ளுகிறோமோ, அந்த அளவிற்கு தேவனுடைய அன்பு நம்மில் பூரணப்பட்டிருக்கிறது. ஏனென்றால், நாம் கிறிஸ்துவின் சிந்தையை அதாவது, பரிசுத்த ஆவியை, தேவனின் ஆவியை ஏற்றுக்கொண்டிருந்தால், அதன் விளைவாக நமது திறமைக்குத் தக்கதாக, தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி விரும்பவும், செய்யவும் தூண்டப்படுவோம். வருஷம் செல்லச் செல்ல இந்தத் திறமையும் தொடர்ச்சியாக விருத்தி செய்யப்பட வேண்டும். எழுப்பப்பட்டு நமக்கு புது உயிர்தெழுதலின் சரீரங்கள் கொடுக்கப்படும் வரைக்கும் பூரணத்துவத்தை அடைய நம்பிக்கை இல்லாவிட்டாலும், கர்த்தரோடு இடைவிடாத ஐக்கியத்தை வைத்துக் கொள்ளத்தக்கதாக எப்பொழுதும் நமது மனதின் ஆவியில் அவரோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளலாம். **(1யோவா 1:7)**

**- Z '97, 312 (R 2235).**

தேவனுடைய வார்த்தையின் ஆவிக்கு பற்றுதல்களின் பிரதிகிரியை இருக்கும் பரியந்தம் புது சித்தத்தால் தேவனுடைய வார்த்தையை பற்றுதல்களின் மீது வைத்திருப்பதே தேவனுடைய வசனத்தைக் கைக்கொள்ளுவதாகும். ஜீவியத்தின் எல்லா நிலைகளிலும் இம்முறையை விடா முயற்சியுடன் தொடர்ந்து செய்யும் போது இச்செய்கை தவிர்க்கப்படக் கூடாமையாய் நம்முடைய இருதயங்களில் தெய்வீக அன்பைப் பூரணப்படுத்த அபிவிருத்தி செய்யும் தெய்வீக அன்பானது; பிதாவினிடத்தில் காட்டும் மிக மேன்மையான அன்பு, மிக மேன்மையான அன்பிற்கு அடுத்தபடியாக குமாரனிடத்தில் காட்டும் அன்பு, தன்னைவிட சத்தியத்தின் சகோதரரிடத்தில் காட்டும் அதிகமான அன்பு, உலகத்தாரிடத்திலும் நமது விரோதிகளிடத்திலும், தன்னிடத்திலும் காட்டும் சமமான அன்பு. **- P '34, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோவா 14:15,16,21,23; ஆதி 18:19; யாத் 19:5; 20:6; 24:7; எண் 9:23;14:24; 1இராஜா 3:14; சங் 18:44; 25:10; 111:10; 143:10; நீதி 19:16; மத் 5:19; 12:50; 13:23; லூக் 6:46-48; யோவா 15:10,14,16; அப் 4:19; 5:29; ரோம 6:17; 1யோவா 3:22,24; 2யோவா 6,9; வெளி 12:17;

**கோபுர வாசிப்பு : Z '11, 387 (R 4896).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?